2023 ஆம் ஆண்டுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

சமூக சேவைகள் திணைக்களம்

செலவுத் தலைப்பு இலக்கம் :- 216

சமூக சேவைகள் திணைக்களம்

இரண்டாம் மாடி

செத்சிறிபாய - II ஆம் கட்டம்

பத்தரமுல்லை

தொலைபேசி	**- 0112187050**
பெக்ஸ்	**- 0112186276**
மின்னஞ்சல்	**- director@socialservices.gov.lk**
இணையத்தளம்	**- www.socialservices.gov.lk**

உள்ளடக்கம்

01 ஆம் அத்தியாயம் - நிறுவனத்தின் தோற்றப்பாடு / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1	அறிமுகம்	3-4
1.2	நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்	5
1.3	பிரதான பணிகள்	6
1.4	நிறுவன ஒழுங்கமைப்பு	7
1.5	சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள்	8-19
1.6	சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழுள்ள நிதிகள்	20
1.7	வெளிநாட்டு உதவி பெறும் கருத்திட்டங்களின் தகவல்கள்	21

02 ஆம் அத்தியாயம் - முன்னேற்றமும் எதிர்கால நோக்கும்

2.1	வலதுகுறைந்த ஆட்களுக்கான நலன்புரி, அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்	22-35
2.2	போதைக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், சமூகமயப்படுத்தும் கருத்திட்டம்	36
2.3	வலது குறைந்த சமுதாயத்தினருக்கான தொழில்வாய்ப்பு உதவி மேம்பாட்டுக்கான கருத்திட்டம்	37
2.4	இலங்கையில் நகர்ப்புற யாசகர்கள் பற்றிய கணக்கெடுப்பு	38
2.5	வெற்றிகள்	39
2.6	சவால்கள்	39
2.7	இலக்குகள்	40

03 ஆம் அத்தியாயம் - ஆண்டுக்கான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகை

3.1	நிதிச் செயலாற்றுகைக் கூற்று	41-42
3.2	நிதி நிலைமை பற்றிய கூற்று	43
3.3	காசோட்டம் பற்றிய கூற்று	44
3.4	நிதி கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்	45
3.5	வருமானம் சேகரிப்பதன் செயலாற்றுகை	45
3.6	ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை பயன்படுத்திக் கொள்வதன் செயலாற்றுகை	46
3.7	நி.பி. 208 இற்கமைய, வேறு அமைச்சுக்கள் / திணைக்களங்களின் பிரதிநிதி என்ற வகையில் இத்திணைக்களத்திற்கு வழங்கப்பட்ட ஏற்பாடு	46
3.8	நிதியல்லாத சொத்துக்களை அறிக்கையிடுவதன் செயலாற்றுகை	46
3.9	கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை	47-53

04 ஆம் அத்தியாயம் - செயலாற்றுகைச் சுட்டிகள்

4.1	நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டி (செயற்றிட்டத்தின் அடிப்படையில்)	54

05 ஆம் அத்தியாயம் - நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் செயாற்றுகை

5.1	இனங்காணப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் (SDG)	55-56
5.2	நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நிறைவேற்றிக் கொள்வதன் வெற்றிகள் மற்றும் சவால்கள்	56

06 ஆம் அத்தியாயம் - மனிதவளங்களின் தோற்றப்பாடு

6.1	பதவியணி முகாமைத்துவம்	57-59
6.2	நிறுவனத்தின் செயலாற்றுகையில் மனிதவளப் பற்றாக்குறை அல்லது மிகை தாக்கம் செலுத்தும் முறை	60
6.3	மனித வள அபிவிருத்தி	61-64

07 அத்தியாயம் – இயைபு அறிக்கை

7.1	இயைபு அறிக்கை	65-70

01 ஆம் அத்தியாயம்

நிறுவனத்தின் தோற்றப்பாடு / நிறைவேற்றுப் பொழிப்பு

1.1 அறிமுகம்

சேர் ஐவர் ஜெனிங்ஸ் அவர்களின் தலைமையில் 1944 ஆம் ஆண்டு நியமனம் செய்யப்பட்ட ஆணைக்குழுவின் சிபாரிசின் பேரில் 1948 ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி சமூக சேவைகள் திணைக்களம் தாபிக்கப்பட்டதுடன், தற்போதைய சமூக சேவைகள் விடயப்பொறுப்பு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சின் கீழ் இத்திணைக்களம் தமது செயற்பணிகளை நிறைவேற்றி வருகின்றது. திணைக்களத்தின் செயற்பணிக்கு இணங்க 2023 ஆம் ஆண்டில் கிடைத்துள்ள ஏற்பாடுகளுக்கு இசைவாக இனங்காணப்பட்ட பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை திட்டமிட்டு கீழ் மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதற்கமைய, சமூக சேவைகள் திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பிலான ஒட்டுமொத்த தகவல்களும் இதில் உள்ளடங்குகின்றன.

ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதகமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ள சமுதாயத்தினருக்கு நிவாரணம் செய்துகொடுக்கும் நோக்கத்துடன் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்ற சமூக சேவைகள் திணைக்களம், வலதுகுறைந்த இளைஞர் யுவதிகள் தமது வீட்டுக்கு, சமுதாயத்திற்கு பயன்வாய்ந்த பிரசைகளாக சமூகத்தில் சுயாதீனமாக வாழ்வதற்குத் தேவையான அறிவு, ஆற்றல் மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்து அவர்களை தேசிய ஊழியப் படையணியில் முனைப்புடன் செயற்படும் பங்காளர்களாக மாற்றியமைப்பதை நோக்காகக் கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கிவருகின்ற 11 தொழில் பயிற்சி நிறுவனங்களின் ஊடாக அதற்கான வாய்ப்புக்கள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் வலது குறைந்த சமுதாயத்தினருக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம் (CBR) முறையான முறையியல்களுக்கு அமையத் திட்டமிட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. இதன் ஒரு அம்சமாக மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் விசேட கருத்திட்டங்களை அமுல்படுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது. மேலும் சமூக சேவைகள் திணைக்களத்தினால் அலுவலர்கள் (சமூக சேவைகள் அலுவலர் / முதியோர் அபிவிருத்தி அலுவலர்கள்) 20 பேர் நாடு முழுவதிலும் 20 வைத்தியசாலைகளில் இருக்கின்ற வலது குறைந்த சமுதாயத்தினருக்கான நலன்புரி நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தி வருகின்றார்கள்.

முன் பிள்ளைப் பருவத்திலேயே சிறுவர்களுக்கு ஏற்படுகின்ற உடல்சார் மற்றும் உளவியல்சார் சிக்கல்களை குறைத்துக் கொள்வதற்காக முன்னதாகவே தலையீடு செய்யத் தேவையான சேவை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பது தொடர்பில் இந்தத் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள நாவின்ன மற்றும் சிதிஜய சிறுவர் வழிகாட்டல் நிலையங்களின் ஊடாக வலது குறைந்த சிறுவர்களின் நலன்புரிக்கான விசேட செயற்பணியொன்று ஆற்றப்பட்டு வருகின்றது.

சமுதாய மட்டத்தில் வாழும் அறிவியல்சார் பலவீனங்களைக் கொண்டுள்ள யாதாயினும் பயிற்றுவித்தலின் மூலம் பயிற்றப்படக்கூடிய இளவயதைச் சேர்ந்த வலது குறைந்தவர்களின் திறன்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழில் பயிற்சிக்கு முன் ஆயத்தப்படுத்துவதற்கு முன் தொழில்சார் திறன் அபிவிருத்தி நிலையமொன்று சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் கொட்டாவ பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையத்திற்கு வலது குறைந்தவர்களாயினும் பயிற்றுவித்தல் ஆற்றலைக் கொண்டுள்ள 14 – 18 வயதைச் சேர்ந்த இளவயதான அறிவுசார் பலவீனத்தைக் கொண்டுள்ள சிறுவர்கள் இணைத்துக் கொள்ளப்படுகின்றார்கள். பயிற்சியின் இறுதியில் திறமைகள் பற்றிய மதிப்பீடு மற்றும் முன்னேற்ற மீளாய்வை அடுத்து தொழில் பயிற்சி நிறுவனமொன்றுக்கு ஆற்றுப்படுத்தல் அல்லது வீடு /சமூகத்துடன் இணைப்பதை மேற்கொள்வது இந்த நிறுவனம் ஊடாக முன்னெடுக்கப்படுகின்றது.

திணைக்களம் அமுல்படுத்தியுள்ள மற்றொரு நிகழ்ச்சித்திட்டமாக போதைக்கு அடிமையாகியுள்ள ஆட்களுக்கு புனர்வாழ்வளிக்கும் நிகழ்ச்சித்திட்டம் காணப்படுகின்றது. இதன் கீழ் போதைக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு வதிவிட புனர்வாழ்வளித்தல் மற்றும் அவர்களை சமூகமயப்படுத்துவது மேற்கொள்ளப்படுகின்றது. அத்துடன், பிரதேச மட்டத்தில் மக்களை விழிப்புணர்வூட்டும்

நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான போதை ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் ஆளுமை அபிவிருத்திக்கான நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதன் மூலம் நாட்டின் எதிர்கால சந்ததியை போதையிலிருந்து விடுவித்துக் கொள்வதற்கு பெரும் பங்களிப்பு வழங்கப்பட்டு வருகின்றது.

இலக்குச் சமுதாயத்தினரின் பொருளாதார, சமூக மற்றும் கலாசார அபிவிருத்திக்கான தேசிய நிகழ்ச்சித்திட்டங்கள் பல அமுல்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் "சித்ரூ" தேசிய கலை நிகழ்ச்சி, வலது குறைந்தவர்களின் சுயசக்தி அமைப்பை பாராட்டுவதற்கான சுவாபிமானி தேசிய விருது வழங்கும் வைபவம், சர்வதேச வெண்பிரம்பு தினக் கொண்டாட்டங்கள் மற்றும் சர்வதேச சமிஞ்சை மொழி தினக் கொண்டாட்டம் போன்றன அரசின் செலவினக் கட்டுப்பாட்டுக்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளுக்கு உட்பட்டு அனுசரணையாளர்களான நிறுவனங்களினதும் பங்களிப்புடன் வெற்றிகரமாக நடாத்தி முடிக்கப்பட்டன. மேலும், வலது குறைந்த சிறுவர்களின் புத்தாண்டு வைபவம் நிறுவன மட்டத்தில் நடாத்தப்பட்டது. நாட்டின் ஒவ்வொரு பிரதேசத்திலும் பரந்து வாழும் வலது குறைந்த சமுதாயத்தினரின் ஆற்றல்கள் மற்றும் திறமைகளை வளர்த்தல், தொழில்சார் பயிற்சிப் பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் அவர்களின் பெற்றோர், பதவியணியினர் மற்றும் ஏனைய உறுப்பினர்களுக்கு மத்தியில் பரஸ்பரம் நட்புறவு, புரிந்துணர்வு மற்றும் நம்பகத்தன்மையை வளர்ப்பதும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அவ்வாறே திணைக்களத்தின் செயற்பணிக்கு இசைவாக சகல அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு மாவட்ட, பிரதேச செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சகல வெளிக்கள அலுவலர்களினதும், திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களின் மற்றும் தலைமை அலுவலகத்தின் அலுவலர்களின் வினைத்திறன், சேவை ஊக்குவிப்பு மற்றும் விளைதிறன் மற்றும் ஆன்மீகத்தை அபிவிருத்தி செய்வதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சி, செயலமர்வு மற்றும் பாடநெறிகளுக்கு அலுவலர்களை ஈடுபடுத்துவதும் மேற்கொள்ளப்படுகின்றது.

2023 ஆம் ஆண்டில் சேவைபெறுனர்களின் நலன்புரிக்காக மேற்கொள்ளப்படுகின்ற சகல நிகழ்ச்சித்திட்டங்கள், கருத்திட்டங்களின் மூலம் உயர்மட்ட செயலாற்றுகையை அடைந்துகொள்ள ஆற்றல் கிடைத்ததுடன், அது தொடர்பான தகவல்கள் மற்றும் செலவுத் தலைப்பு 216 இன் கீழான ஒட்டுமொத்த நிதிசார் செயலாற்றுகையும் இதில் உள்ளடங்குகின்றது.

1.2 நிறுவனத்தின் நோக்கு, செயற்பணி, நோக்கங்கள்

நோக்கு

"2030 ஆம் ஆண்டளவில் ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதகமான நிலைமைகளுக்கு ஆளாகியுள்ள சமுதாயத்தினரின் உரிமைகள் மற்றும் சம அந்தஸ்து உறுதி செய்யப்பட்ட மற்றும் பாதுகாப்பான இலங்கையை ஒருவாக்குவதற்கு முன்னோடியாகச் செயற்படுதல்"

செயற்பணி

"இலக்கு சமுதாயத்தினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் வலுவூட்டுவதன் மூலம் சமூக இடையீட்டுக்காக நிறுவனங்களுக்கு இடையிலான ஒருங்கிணைப்பு மற்றும் தொழில்வாண்மைசார் தலையீட்டின் மூலம் புத்தாக்க அணுகுமுறைகளின் ஊடாக வேகமான, வினைத்திறன்மிக்க மற்றும் விளைதிறன்மிக்க ஆராய்ச்சிகளை நடாத்தல், கொள்கைகளை வகுத்தல் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதன் மூலம் உத்தேச பெறுபேறுகளை அடைந்துகொள்ளல்"

நோக்கங்கள்


- வயது 16 – 35 இற்கிடையே வலது குறைந்த இளைஞர் யுவதிகளின் தொழில்சார் செயற்பாடுகள் மற்றும் வெளிச் செயற்பாடுகளை பலப்படுத்தல்.
- பாதுகாவலர்களை இழந்துள்ள புத்திக் குறைபாட்டைக் கொண்ட சிறுவர்கள் மற்றும் பெண்களுக்கு வதிவிட அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
- 06 மாதம் முதல் 16 வயதுக்கு இடைப்பட்ட பல்வேறு வகையில் வலது குறைந்த சிறுவர்களின் குறித்த குறைபாட்டு நிலைமைகளைத் தணிப்பதற்காக முன்னதாகவே தலையீடு செய்தல்.
- வலது குறைந்த சமுதாயத்தினர் அன்றாட வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்களையும் குறைப்பதற்கு தலையீடு செய்தல் மற்றும் அவர்களை வலுவூட்டல்.
- சமிஞ்சை மொழியை மேம்படுத்தல்.
- வலது குறைந்த ஆட்களுக்கு சேவைகளை வழங்கும் தொண்டர் அமைப்புக்களை வலுவூட்டல்.
- போதைக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு வதிவிட புனர்வாழ்வளித்தல், அவர்களுக்கு தொழில் பயிற்சி அளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தல்.
- பல்வேறு சமூக சிக்கல்களுக்கு ஆளாகியுள்ள ஆட்களுக்கு சரியான வழிகாட்டல்களைப் பெற்றுக் கொடுத்தல்.
- செவிப்புல குறைபாடுகளைக் கொண்டுள்ள ஆட்களுக்கு செவிப்புலக் குறைபாடுகளைக் கொண்டவர்களுக்கான அடையாள அட்டைகளை வழங்குதல்.
- திளைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை உயர் மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான அறிவு, பயிற்சியைப் பெற்றுக் கொடுத்தல்.

1.3 பிரதான பணிகள்

- வலது குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி வழங்குதல், சுய தொழில்வாய்ப்புக்களுக்கு தொழில்சார் கருவிகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் திறந்த சந்தையில் தொழில்வாய்ப்புக்களில் ஈடுபடுத்தல்.
- வலது குறைந்தவர்களுக்கு தொழில் சந்தையை இனங்காணல் மற்றும் விஸ்தரித்தல்.
- வலது குறைந்தவர்களின் சமகாலத் தேவைகள் மற்றும் போக்குகளை இனங்காணல் மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல்.
- வலது குறைந்த சிறுவர்கள் தொடர்பில் முன்னதாகவே தலையீடு செய்வதன் மூலம் அவர்களை இடையீட்டுக் கல்வியில் ஈடுபடுத்தல்.
- செவிப்புலனற்றோருக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் சமிஞ்சை மொழிபெயர்ப்புச் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் செவிப்புலனற்றோரின் அன்றாட நடவடிக்கைகளை இலகுபடுத்தல்.
- பெற்றோர், பாதுகாவலர்களை இழந்துள்ள பல்வேறு வலது குறைந்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ள பெண்கள் மற்றும் புத்திக் குறைபாட்டைக் கொண்டுள்ள ஆண் பிள்ளைகளுக்கு ஆயுட் காலம் முழுவதிலும் அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
- வலது குறைந்த ஆட்களின் நலன்புரிக்காக பேணிவரப்படுகின்ற தொண்டர் அமைப்புக்களுக்கு நிதி உதவி வழங்குதல்.
- வயது 60 இற்கு குறைவான கற்புலனற்ற ஆட்களுக்கு கண் வில்லைகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் மருத்துவ உதவி வழங்குதல். கற்புலனற்ற ஆட்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விளையாட்டு, கல்வி, கலாசார நடவடிக்கைகளுக்கு உதவி வழங்குதல், அவர்களின் நிறுவனங்களுக்கு உட்பட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல் மற்றும் வேறு நலன்புரி நடவடிக்கைகள்
- சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் வலது குறைந்தவர்களுக்குத் தேவையான சேவைகளைப் பெற்றுக் கொடுத்தல்.
- பிரதேச மட்டத்தில் வலது குறைந்த ஆட்களின் சுயசக்தி அமைப்பைத் தாபித்தல் மற்றும் பலப்படுத்தல்.
- போதைக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு வதிவிட புனர்வாழ்வளித்தல் மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்படுத்தல்.

  திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களின் அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கினை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகள், கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளில் ஈடுபடுத்தல்.

1.4 நிறுவன ஒழுங்கமைப்பு



1.5 சமூக சேவைகள் திணைக்களத்தில் காணப்படுகின்ற பிரதான பிரிவுகள் மற்றும் நிறுவனங்கள்

සමාජ සේවා දෙපාර්තමේන්තුව

சமூக சேவைகள் திணைக்களத்தில் உள்ள பிரிவுகள்

- நிருவாகப் பிரிவு
- சமிஞ்சை மொழிப் பிரிவு
- சேவைகள் பிரிவு
- சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு பிரிவு
- அபிவிருத்திப் பிரிவு
- நிதி மற்றும் கணக்குகள் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு
- ஆராய்ச்சி மற்றும் ஊடகப் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்

❖ **தொழில் பயிற்சி நிறுவனம்**

- கெட்டவல தொழில் பயிற்சி நிறுவனம்
- வத்தேகம தொழில் பயிற்சி நிறுவனம்
- அமுனுகும்புர தொழில் பயிற்சி நிறுவனம்
- மாதம்பே தொழில் பயிற்சி நிறுவனம்
- சீதுவ தொழில் பயிற்சி நிறுவனம்
- கலவான தொழில் பயிற்சி நிறுவனம்
- தெலம்புயாய தொழில் பயிற்சி நிறுவனம்
- ராகம தொழில் பயிற்சி நிறுவனம்
- மட்டக்களப்பு தொழில் பயிற்சி நிறுவனம்
- கிளிநொச்சி தொழில் பயிற்சி நிறுவனம்
- தோலங்கம்முவ தொழில் பயிற்சி நிறுவனம்

❖ **சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

- நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம்
- சித்திஜய சிறுவர் வழிகாட்டல் நிலையம்

❖ **முன் தொழில் திறன் அபிவிருத்தி நிலையம், கொட்டாவ**

❖ **அரவணைப்பு நிலையங்கள்**

- ஜயவிரு செனண அரவணைப்பு நிலையம்
- மனுசத் பியச மகளிர் அரவணைப்பு நிலைய்

❖ **ஜயவிரு சமாதி புனர்வாழ்வளிப்பு நிறுவனம்**

1.5.1 திணைக்களத்திற்கு உரித்தான பிரிவுகள்

1.5.1.1 நிருவாகப் பிரிவு

சமூக சேவைகள் திணைக்கத்தின் செயற்பணியின் ஊடாக அடைந்துகொள்ள எதிர்பார்க்கப்பட்டுள்ள நோக்கங்களை வினைத்திறனுடனும், விளைதிறன்மிக்கவாறும் அடைந்துகொள்ளத் தேவையான உதவிச் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பது நிருவாகப் பிரிவின் பிரதான செயற்பணியாகும்.

இதன் போது மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், தாபன மற்றும் நிருவாக நடவடிக்கைகளை மேற்கொள்ளல், கொள்கைசார் தீர்மானங்களை மேற்கொள்ளல், திணைக்களத்தின் சகல பிரிவுகளுக்கும் உதவிச் சேவைகளை வழங்குவது தொடர்பில் நிருவாகப் பிரிவினால் பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- சமூக சேவைகள் திணைக்களத்தின் பொதுவான நிருவாக நடவடிக்கைகள் மற்றும் திணைக்களத்தின் தபால் பற்றிய நடவடிக்கைகள்
- திணைக்களப் பதவியணியினருக்கு அலுவலர்களை ஆட்சேர்ப்புச் செய்தல், பதவி உயர்வு, வினைத்திறன் காண் தடைப் பரீட்சைகளை நடாத்தல், சம்பள ஏற்றங்களை செலுத்தல், இடமாற்றல் மற்றும் ஓய்வுறுத்தல் போன்ற சுயவிபரக் கோப்புக்கள் சம்பந்தப்பட் சகல நடவடிக்கைகளும்.
- சேவைசார் அவசியத்தன்மையின் அடிப்படையில் புதிய பதவிகளை அங்கீகரித்துக் கொள்ளல், ஆட்சேர்ப்பு நடவடிக்கைமுறையை தயார் செய்தல், பதவியணியினரின் தகவல்களை இற்றைப்படுத்தல், அமைச்சரவை விஞ்ஞாபனங்களை தயார் செய்தல் போன்ற கடமைசார் நடவடிக்கைகள்.
- பதவியணியினருக்கு லீவு, புகையிரத ஆணைச்சீட்டு, மேலதிக நேரக் கொடுப்பனவு, இடர் கடன், ஆதனக் கடன் பெற்றுக கொடுப்பது சம்பந்தமான நடவடிக்கைகள்.
- அக்ரஹார காப்புறுதித் திட்டம் சம்பந்தமான கடமைகள்.
- வீட்டு வாடகை அறவிட்டுக் கொள்வது பற்றிய கடமை நடவடிக்கைகள்.
- அலுவலக கட்டளைகளை சமர்ப்பித்தல், திணைக்களச் சுற்றறிக்கைகள் மற்றும் திணைக்களத்திற்கான அறிவுரைகளை வழங்குதல். ஏனைய அரச நிறுவனங்களினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளைப் பெற்றுக் கொண்டு சுற்றறிக்கை கோப்புக்களை இற்றைப்படுத்திப் பேணிவருதல் மற்றும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அமுல்படுத்தல்.
- வருகை பற்றிய பதிவேடு, வெளியே செல்லும் பதிவேடு, குறுகிய நேரலீவுப் பதிவேடு, லீவுப் பதிவேடு மற்றும் கைவிரல் அடையாளப் பதிவுகளின் பொழிப்புப் பதிவேட்டைப் பேணிவருதல்.
- வெளிநாட்டு லீவு, வெளிநாட்டு புலமைப்பரிசில் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சிகள் தொடர்பான கடமை நடவடிக்கைகள்.
- திணைக்களத்தின் தலைமை அலுவலக மற்றும் நிறுவனங்களின் அலுவலர்கள் பற்றிய ஒழுக்காற்று சம்பந்தமான கடமை நடவடிக்கைகள்
- திணைக்களத்தின் தலைமை அலுவலகம் மற்றும் அதன் நிறுவனங்கள் சம்பந்தமான போக்குவரத்து நடவடிக்கைகள்
- சீருடை கொடுப்பனவு உரித்தான அலுவலர்களை இனங்காணல் மற்றும் அவர்களுக்கு உரித்தான சீருடை கொடுப்பனவை இனங்காணல் மற்றும் செலுத்துவது பற்றிய கடமை நடவடிக்கைகள்

- திணைக்களத்தின் கீழ் உள்ள நிறுவனங்களின் அலுவலர்களை பதில் கடமையாற்றல், பதில் அடிப்படையில் சேவையாற்றுவதற்கு நியமனம் செய்வதற்காக அங்கீகாரத்துக்காக சமர்ப்பித்தல் மற்றும் அது பற்றிய கடமை நடவடிக்கைகள்.

- திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கு ஒப்பந்த /பதிலீட்டு சேவை /தொண்டர் அடிப்படையில் அலுவலர்களை சேவைக்கு அமர்த்தல் மற்றும் நியமனம் செய்தல்.

- 2016 இன் 12 ஆம் இலக்க தகவல் அறியும் உரிமை பற்றிய சட்டத்தின் ஏற்பாடுகளை அமுல்படுத்தும் நடவடிக்கைகள்.

- திணைக்களத்தின் மின்சாரம், தொலைபேசி இணையத்தளம், பாதுகாப்புச் சேவைகளுக்கான செவலினம், சுத்தம் செய்யும் சேவைகளுக்கான செலவினம், பத்திரிகை செலவினத்திற்கான பட்டியல்களை செலுத்தல் மற்றும் திணைக்களத்தின் இயந்திரங்கள், உபகரணங்களை புதுப்பிப்பது பற்றிய நடவடிக்கைகள்.

1.5.1.2 சமிஞ்சை மொழிப் பிரிவு

செவிப்புலனற்ற மற்றும் பகுதியளவிலான செவிப்புலனற்ற ஆட்களுக்கு கல்வி, சமூக, கலாசார சேவைகளை வழங்குவதற்கு மற்றும் மருத்துவ சுகாதாரம் மற்றும் சட்ட வசதிகளை செய்துகொடுப்பதற்கும் தொடர்பாடல் ஊடகமாக இருப்பது சமிஞ்சை மொழியாகும். இந்த சமிஞ்சை மொழியை, ஒரு மொழியாக அங்கீகரிப்பதற்கு 2010.09.05 ஆம் திகதி அமைச்சரவையினால் கொள்கைசார் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

சமிஞ்சை மொழிபெயர்ப்புச் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக தற்போது திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள சமிஞ்சை மொழிபெயர்ப்பாளர்கள் 06 பேர் கடமையாற்றி வருகின்றார்கள் என்பதுடன், இவர்களில் 03 பேர் தொழில் பயிற்சி நிறுவனங்களிலும் ஏனைய மூவரும் தலைமை அலுவலகத்திலும் சமிஞ்சை மொழிபெயர்ப்பாளர்களாக கடமையாற்றி வருகின்றார்கள்.

செவிப்புலனற்ற ஆட்களின் தொடர்பாடலுக்காக அரச நிறுவனங்களுக்குத் தேவையான உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல் குறிப்பாக இலங்கை பாராளுமன்றம், (உதா. பொலிஸ் நிலையங்கள், நீதிமன்றம், வைத்தியசாலை மற்றும் அரசின் ஏனைய நிறுவனங்கள்) மற்றும் தேசிய தொலைக்காட்சி அலைவரிசையிலும் நண்பகர் 12.00 மற்றும் மாலை 6.55, சிரச தொலைக்காட்சி சேவையில் இரவு 7.00 ஆகிய பிரதான செய்தி ஒளிப்பரப்பின் போதும் சமிஞ்சை மொழிபெயர்ப்பாளர்களின் சேவை வழங்கப்படுகின்றது.

1.5.1.3 சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு (சீ.பி.ஆர்.) பிரிவு

சமூக சேவைகள் திணைக்களம் 1993 ஆம் ஆண்டு முதல் வலது குறைந்த ஆட்களுக்கான சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் ஊடாக வலது குறைந்த ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தும் செயற்பணிக்கு விசேட சேவையொன்றை ஆற்றி வருகின்றது. குறிப்பாக வீட்டு மட்டத்திலேயே வலது குறைந்த ஆட்களுக்கு புனர்வாழ்வளித்தல், சமூகமயப்படுத்தல் மற்றும் சேவை ஆற்றுவது இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதன் போது பிரதான பணியாக இருப்பது வலது குறைந்த ஆட்களை இனங்கண்டு ஒவ்வொரு வலது குறைந்த ஆளுக்கும் சமூக சேவைகள் அலுவலர் புனர்வாழ்வளிக்கும் திட்டமொன்றை தயார் செய்வார். வலது குறைந்த ஆட்களுக்கு புனர்வாழ்வளிக்கும் போது அவர்களுக்குத் தேவையான சேவைகள் மற்றும் சந்தர்ப்பங்களை உருவாக்குவதற்கு கிராமிய மட்டம் முதல் தேசிய மட்டம் வரை இயங்கிவருகின்ற முறையியல் காணப்படுகின்றது.

வலது குறைந்த ஆட்களை இனங்காணல். அறிக்கைகளை பேணிவருதல், தேவைகளுக்கு அமைய புனர்வாழ்வளிப்புத் திட்டங்களை தயார் செய்தல், குடும்ப உறுப்பினர் ஒருவரை பயிற்றுவித்தல், கண்காணிப்புச் செய்தல் என்பன கிராமிய புனர்வாழ்வளிப்பு குழுவின் செயற்பணியாகும். இதன் போது கிராமிய மட்டத்தில் தீர்த்துக் கொள்ள முடியாத சிக்கல்களை பிரதேச செயற்குழுவின் சமர்ப்பித்து தீர்வுகளைப் பெற்றுக் கொள்வது மேற்கொள்ளப்படும். பிரதேச மட்டத்தில் தீர்த்துக் கொள்ள முடியாத சிக்கல்கள் மாவட்ட மட்டத்திலான செயற்குழவினடம் சமர்ப்பிக்கப்பட்டு தேவையான தீர்வுகளை வழங்கக்கூடிய சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதும் இதன் போது மேற்கொள்ளப்படுகின்றது. இங்கு மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்திலான புனர்வாழ்வளிப்பு செயன்முறையை அமுல்படுத்துவதிலுள்ள தடைகளை இனங்கண்டு அதற்கான கொள்கைகள், சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளை தயார் செய்வதும், அதன் மூலம் வலது குறைந்த ஆட்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு கைச்சாத்திடப்பட்டுள்ள சர்வதேச சமவாயங்களுக்கு அமைய நடவடிக்கை மேற்கொள்வதும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக,

- வலது குறைந்தவர்களுக்கு நேரடியாக ஏற்பாடுகளைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பிந்திய பொறுப்பு பற்றிய நடவடிக்கைகளை மேற்கொள்ளல். (கொமட், வாயு மெத்தை, நீர் மெத்தை, மின்சக்தி வசதிகள் மற்றும் பிரவேச வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.)

- பிரதேச மட்டத்தில் வலது குறைந்த ஆட்களின் சுயசக்தி அமைப்பினைத் தாபித்தல் மற்றும் பலப்படுத்தல் மற்றும் ‘‘சுயஅபிமானி’’ என்ற பெயரில் தேசிய வைபவத்தின் ஊடாக சுயசக்தி அமைப்புக்கள் மற்றும் ஆட்களை வருடாந்தம் பாராட்டுதல்.

- அரச மற்றும் அரசசார்பற்ற வேறு அமைப்புக்களுடன் இணைந்து சேவை அவசியத்தன்மையைப் பெற்றுக் கொள்ள வசதிகளை ஏற்படுத்தல்.

- வலது குறைந்த சிறுவர்களுக்காக பேணிவரப்படுகின்ற திறன் அபிவிருத்தி நிலையங்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை செய்துகொடுத்தல்.

- மாவட்ட முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்தல்.

- சமுதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் இணைந்து பிரதேச மற்றும் மாவட்ட மட்டத்தில் வெளிக்கள கடமை நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சமூக சேவை அலுவலர்கள் மற்றும் அபிவிருத்தி அலுவலர்களின் அறிவை இற்றைப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

1.5.1.4 சேவைகள் பிரிவு

இலங்கை முழுவதிலும் பரந்துள்ள ஓரங்கட்டப்பட்ட மற்றும் பாதிப்புறு நிலைக்கு ஆளாகியுள்ள ஆட்களை அரச அனுசரணையின் கீழ் பலப்படுத்தி பெருமைமிக்க பிரசைகளாக வாழ்வதற்கான உரிமையை பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு சேவைசார் பிரிவு இயங்கி வருவதுடன், இதன் நோக்கங்களை அடைந்துகொள்வதில் பின்வரும் செயற்பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

- வயது 16-35 இற்கு இடைப்பட்ட வலது குறைந்த சமுதாயத்தினரை தொழில் பயிற்சி மூலம் பலப்படுத்தல்.

- தொழில் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்காக வலது குறைந்த சிறுவர்களின் முன் தொழில்சார் திறமைகளை அபிவிருத்தி செய்தல்.

- தொழில் பயிற்சியை பூர்த்தி செய்துள்ள பயிலுனர்களை தொழில் வாய்ப்புக்களில் (சுயதொழில் மற்றும் நிறுவனமயப்படுத்திய) ஈடுபடுத்தல் மற்றும் பின்னாய்வை மேற்கொள்ளல்.

- வலது குறைந்த சிறுவர்களை பாலர் பாடசாலை கல்வி மற்றும் பாடசாலை கல்வி வரை அபிவிருத்தி செய்வது தொடர்பாக சிறுவர் வழிகாட்டல் நிலையங்களின் ஊடாக சேவைகளை வழங்குதல்.

- போதைவஸ்துப் பயன்பாட்டைத் தடுப்பதற்கு போதைக்கு அடிமையானவர்களை புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் ஊடாக புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தல் தொடர்பான சேவைகளை வழங்குதல்.

- வலது குறைந்த சிறுவர்களுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள விசேட கல்விப் பிரிவு அரசசார்பற்ற பாலர் பாடசாலைகளின் ஆசிரியர்களின் சேவைகளை பாராட்டல் மற்றும் ஊக்குவிப்பதற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை செலுத்தல்.

- பெற்றோர் அல்லது பாதுகாவலர்களை இழந்துள்ள வலது குறைந்த புத்திக் குறைவான ஆண் அல்லது பெண்களுக்கு அரவணைப்பு நிலையங்களின் ஊடாக அரவணைப்புக்குத் தேவையான சேவைகளை வழங்குதல்.

- வலது குறைந்த சமுதாயத்தினருக்காக இயங்கிவருகின்ற தொண்டர் அமைப்புக்களுக்கு பராமரிப்பு உதவிகளை வழங்கி குறித்த நிறுவனங்களின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற சமூக சேவைக்கு அரச அனுசரணையை வழங்குதல்.

1.5.1.5 அபிவிருத்திப் பிரிவு

அபிவிருத்திப் பிரிவினால் திணைக்களத்தின் ஒட்டுமொத்த செயற்பாட்டிலும் நேரடியாக தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பல்வேறு செயற்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. திணைக்களத்தின் திட்டங்களைத் தயார் செய்தல், முன்னேற்ற அறிக்கைகளை தயார் செய்தல், அலுவலர்களின் திறன் அபிவிருத்திக்குச் சமாந்தரமாக மேற்கொள்ளப்படுகின்ற பயிற்சியளிப்புக்கள், அறிவை இற்றைப்படுத்தல், விளைதிறனை அபிவிருத்தி செய்தல் போன்ற இங்கு முக்கியமானவையாகும்.

மேலும், தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல், ஒருங்கிணைப்பு, வழிப்படுத்தல், பல்வேறு கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல், தகவல்களை இற்றைப்படுத்தல், நூதன சமூகப் போக்குகளை இனங்காணல் மற்றும் அவற்றைப் பயன்படுத்துவது தொடர்பிலும் முக்கியமான செயற்பணியொன்று ஆற்றப்பட்டு வருகின்றது. இதற்கு மேலதிகமாக திணைக்களத்தின் நோக்கங்களுக்கு இணங்க திணைக்களத்தின் நடவடிக்கைகளை பேணிவருவதற்காக பின்வரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- திணைக்களத்தினால் வருடாந்தம் நடாத்தப்படுகின்ற தேசிய நிகழ்ச்சித்திட்டங்களை (வலது குறைந்தோருக்கான தேசிய மெய்வல்லுனர் விளையாட்டு விழா, தேசிய சமிஞ்சை மொழித் தினக் கொண்டாட்டம், சித் ரூ தேசிய கலை நிகழ்ச்சி) ஒழுங்கு செய்தல், ஒருங்கிணைப்பு மற்றும் வழிப்படுத்தல்.

- திணைக்களத்தின் வருடாந்த செயற்றிட்டம், செயலாற்றுகை அறிக்கை மற்றும் முன்னேற்ற அறிக்கைகளைத் தயார் செய்தல்.

- திணைக்களத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்கு செய்தல் மற்றும் நடாத்தல்.

- வைத்தியசாலைகளில் நோயாளர் நலன்புரி நடவடிக்கைகள் தொடர்பிலான அலுவலர்கள் சம்பந்தமான ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- தொண்டர் அமைப்புக்கள் தொடர்பான கடமைகள் மற்றும் சமூக சேவை அமைப்புக்களுக்கு (உள்நாட்டு இறைவரிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள அரக்கட்டளை நிறுவனம் அல்லது தொண்டர் சமூக சேவைகள் அமைப்புக்களை பதிவு செய்யும் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள இலாபம் உழைக்காத அமைப்புக்கள்) கிடைக்கின்ற வெளிநாட்டு கொடைகளுக்கு தீர்வைவரிச் சலுகை வழங்கத் தேவையான சிபாரிசுகளைப் பெற்றுக் கொடுப்பது பற்றிய கடமை நடவடிக்கைகள்.

- அரசசார்பற்ற அமைப்புக்கள் மற்றும் சமூக சேவைகள் திணைக்களம் இணைந்து மேற்கொள்ளும் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான கடமை நடவடிக்கைகள்.

- திணைக்களத்திற்கு உரித்தான காணிகளை சாட்டுதல் செய்துகொள்ளல் மற்றும் அது சம்பந்தமாக காணப்படுகின்ற சிக்கல்களைத் தீர்த்து வைத்தல் மற்றும் அது சம்பந்தமான அட்டவணையொன்றைப் பேணிவருதல்.

- மாகாண சமூக சேவைகள் திணைக்களங்களை ஒருங்கணைப்புச் செய்தல்.

- செவிப்புலனற்ற ஆட்களின் ஆள் அடையாளத்தை உறுதி செய்வதற்கான அடையாள அட்டை வழங்குதல்.

- உற்பத்தித்திறன் நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தல்.

1.5.1.6 நிதி மற்றும் கணக்குகள் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களம் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு வருடாந்த ஏற்பாடுகளைப் பெற்றுக் கொள்ளல், முகாமைத்துவம் செய்தல், கொடுப்பனவுகளை செலுத்துவதுடன், திணைக்களத்தின் கணக்குகளை வெளிப்படைத்தன்மையுடன் பேணிவருவது மற்றும் நிதிப் பிரமாணங்களின் மூலம் கணக்கீட்டு அலுவலருக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள், நிதிக் கட்டுப்பாட்டுடன் பேணிவருவது நிதி மற்றும் கணக்குகள் பிரிவினால் நிறைவேற்றப்படுகின்ற முக்கிய செயற்பணியாகும்.

இங்கு பிரதம கணக்காளரின் வழிகாட்டல், முகாமைத்துவம், கண்காணிப்பு மற்றும் வழிப்படுத்தலின் கீழ் நிதி மற்றும் கணக்குகள் பிரிவின் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், நிதி ஒழுங்குவிதிகள், விசேட ஏற்பாடுகள் மற்றும் அரசின் சுற்றறிக்கைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள தத்துவங்களுக்கு இணங்க பின்வரும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- சமூக சேவைகள் திணைக்களத்தின் வருடாந்த வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டைத் தயார் செய்து உரிய திகதிக்கு முன்னர் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்திடம் சமர்ப்பித்தல்.

- சகல கொடுக்கல் வாங்கல்களையும் சரியாக மற்றும் இற்றைப்படுத்தி கணக்குகளில் பதிவு செய்தல் மற்றும் கணக்குகளை சமர்ப்பித்தல்.

- உள்ளக நிதிக் கொள்கையை தயார் செய்தல் மற்றும் நிதி முகாமைத்துவத்தை பலப்படுத்துவதற்காக உயர் மட்ட முகாமைத்துவத்துக்கு உதவுதல்.

- சகல பெறுகைகள் மற்றும் செலவினங்களையும் கண்காணிப்புச் செய்தல் மற்றும் செலவினக் கட்டுப்பாடு.

- செலவின மீளாய்வுக்கு உயர் மட்ட முகாமைத்துவத்துக்கு பிரேரணைகளை சமர்ப்பித்தல்.

- பொதுத் திறைசேரி மற்றும் கணக்காய்வாளர் திணைக்களத்திற்கு இறுதிக் கணக்குகளை சமர்ப்பித்தல் மற்றும் ஒருங்கிணைப்புச் செய்யும் பணிகள்.

- சகல கொள்வனவுகளின் போதும் வெளிப்படைத்தன்மையுடன் பெறுகை செயன்முறையை அமுல்படுத்தல் மற்றும் உதவுதல்.

- சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற அரசாங்க சொத்துக்களை இற்றைப்படுத்தல், முகாமைத்துவம் செய்தல் மற்றும் கணக்குப் பதிவு.

1.5.1.7 உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு

தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரதம கணக்கீட்டு அலுவலரின் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்காக மேற்படி சட்டத்தின் 40 ஆம் பிரிவுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ள நியமனங்கள் மற்றும் நி.பி. 133 மற்றும் 134 இற்கமைய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்குக் கிடைத்துள்ள தத்துவங்கள் மற்றும் முகாமைத்துவ கணக்காய்வு திணைக்களத்தின் சுற்றறிக்கையின் நியதிகளுக்கு அமைய கணக்காய்வு நடவடிக்கைகள் இப்பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன.

1.5.1.8 ஆராய்ச்சி மற்றும் ஊடகப் பிரிவு

சமூக சேவைகள் திணைக்களத்தின் மூலம் சேவை ஆற்றப்படுகின்ற சேவை பெறுநர்களின் சிக்கல்கள் மற்றும் தேவைகளை இனங்கண்டு அவர்களுக்கு மென்மேலும் விளைதிறன்மிக்க சேவையைப் பெற்றுக் கொடுப்பதே இப்பிரிவு தாபிக்கப்பட்டதன் நோக்கமாகும் என்பதுடன், மேற்படி நோக்கத்தை அடைந்துகொள்வதற்காக பின்வரும் செயற்பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

- சமூக பொருளாதார சூழலில் இடம்பெறுகின்ற சமூக மாற்றங்களுடன் ஒருவாகின்ற சமூக சிக்கல்கள் மற்றும் பிரச்சினைகள் பற்றிய ஆராய்ச்சிகள் / கணக்கெடுப்புக்களை மேற்கொள்ளல்.

- சமூக சேவைகள் திணைக்களத்தினால் ஆற்றப்படுகின்ற சேவைகளின் தரம் மற்றும் விளைதிறனை அளவிடுவதற்கான ஆராய்ச்சிகள் / ஆய்வுகளை நடாத்தல்.

- தேசிய ரீதியில் ஆராய்ச்சிகளை நடாத்துவதற்கு அலுவலர்களை பயிற்றுவித்தல் மற்றும் அதுனூடாக நாடளாவிய ரீதியில் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளல் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளை தயார் செய்தல்.

- சமூக சேவைகள் திணைக்களம் தொடர்பான சட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி நவீன தேவைகளுக்கு இசைவானவாறு திருத்தம் செய்யத் தேவையான ஆரம்ப கட்டப் பணிகளை மேற்கொள்ளல்.

- சமூக சேவைகள் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் தேசிய வைபங்கள் தொடர்பில் ஊடக அறிவித்தல்களை தயார் செய்தல் மற்றும் ஊடக நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்தல்.

- சமூக சேவைகள் திளைக்களத்தின் செயற்பணியை மேம்படுத்தல், இலக்கு சேவை பெறுநரை விழிப்புணர்வூட்டல் மற்றும் ஈர்ப்பதற்காக கற்புல, செவிப்புல மற்றும் எழுத்து மூலமான ஊடகங்களை மேம்படுத்தும் கருவிகளை வடிவமைத்தல்.

1.5.2 திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள்

1.5.2.1 தொழில் பயிற்சி நிறுவனங்கள்

வலது குறைந்த இளைஞர், யுவதிகளை தமது வீட்டுக்கும், சமுதாயத்திற்கும் பயன்மிக்க பிரசைகளாக வாழ்வதற்குத் தேவையான அறிவு, திறமை மற்றும் மனப்பாங்கை அபிவிருத்தி செய்வதற்காக தொழில் பயிற்சி வழங்குவது சமூக சேவைகள் திணைக்களத்தின் ஒரு முக்கிய செயற்பணியாகும். வலது குறைந்த இளைஞர் யுவதிகளின் உரிமைகளை பாதுகாத்து கௌரவமாக சமூகத்தில் எழுந்திருப்பதற்கு இடவசதிகளை செய்துகொடுத்து அவர்களை தேசிய ஊழியப்படையணியின் ஆக்கபூர்வமான பங்காளர்களாக மாற்றியமைப்பது இதன் நோக்கமாகும். இதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் பேணிவரப்படுகின்ற தொழில் பயிற்சி நிறுவனங்கள் 08 மற்றும் அதன் இணைத் தொழில் பயிற்சி நிறுவனம் 01 (சிங்கள மொழி மூலமான) மற்றும் கம்பஹா, கண்டி, இரத்தினபுரி, ஹம்பாந்தோட்டை, புத்தளம், கேகாலை ஆகிய மாவட்டங்களிலும், தமிழ் மொழி மூலமான தொழில் பயிற்சி நிறுவனங்கள் 2 மட்டக்களப்பு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலும் இயங்கிவருகின்றன.

வயது 16-35 இற்கு இடைப்பட்ட யாதாயினும் வலது குறைந்த நிலைமையினால் பாதிக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சி பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இதன் மூலம் கிடைக்கின்றது. இந்தப் பயிற்சி ஒரு வருடம் அல்லது இரண்டு வருட காலப்பகுதியைக் கொண்டதாகவும், தொழில் பயிற்சி பெறும் பயிலுனர்களுக்கு இலவசமாக சீருடை, வதிவிட வசதி, பயிலுனர் கொடுப்பனவு மற்றும் வெற்றிகரமாக பயிற்சியை நிறைவு செய்யும் பட்சத்தில் தொழிலுக்குத் தேவையான நலன்புரி மற்றும் கருவிகள் தொகுதி மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதள்கள் வழங்கப்படும். தொழில் பயிற்சிக்கு மேலதிகமாக சமிஞ்சை மொழிப் பயிற்சி, கலை மற்றும் அன்றாட வாழ்க்கைத் திறன்களை மேம்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் தலைமைத்துவப் பயிற்சி மற்றும் விளாட்டுத் திறமைகளைக் கொண்டவர்களாக பயிலுனர்களை சமூகமயப்படுத்துவதை நோக்காகக் கொண்டு 21 பாடநெறிகளின் கீழ் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

தொழில் பயிற்சி நிறுவகத்தினால் நடாத்தப்படுகின்ற பாடநெறிகள்

பாடநெறி	கொள்ளளவு	130	50	100	100	100	24	30	40	50	20	50
	ஆட்சேர்ப்பு செய்யும் பயிலுனர்கள் பாடநெறி காலம்	ஆ/பெ சீதுவ	ஆண் கெடவல	ஆ/பெ வத்தேகம	ஆ/பெ தெலம்புவா	ஆ/பெ அமுனுகும்புர	ஆ/பெ ராகம *	ஆண் கலவான	ஆ/பெ மாதம்பே	ஆ/பெ மட்டக்களப்பு	ஆ/பெ தோலங்கமு	ஆ/பெ கிளிநொச்சி
1.தொலைக்காட்சி மற்றும் அது சார்ந்த உபகரணம் புதுப்பித்தல் தொழில்நுட்பக் கலை	02 வருடம்	■		■	■		■			■		
2.தச்சுத் தொழில்	02 வருடம்	■	■	■								
3.ஆடை தைத்தல்	02 வருடம்	■		■	■		■		■	■		■
4.தகவல் தொழில்நுட்பம்	02 வருடம்	■		■	■		■		■			■
5.முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் திருத்தம் செய்தல்	02 வருடம்		■									
6.மோட்டார் வாகனம் திருத்தும் தொழில்நுட்பம்	02 வருடம்		■		■							
7.வீட்டுப் பயிர் செய்கை	02 வருடம்		■	■	■	■		■				
8. ஆடை தைத்தல்	01 வருடம்			■		■						
9. உடல் பிடித்துவிடல் சிகிச்சைமுறை	01 வருடம்	■										
10.வீட்டு மின் சுற்றுத் தொழில்நுட்பம்	02 வருடம்				■							
11.மோட்டார் வாகனங்களுக்கு வர்ணம்தீட்டல்	02 வருடம்		■									
12.வெல்ரின் கலை	02 வருடம்		■									
13.சீமேந்து சார்ந்த வடிவமைப்புக் கலை	02 வருடம்					■						
14. தையல் இயந்திரம் இயக்குதல் (தொழில்சாலை – ஜுக்கி)	01 வருடம்	■							■			
15. கைப்பணிக் கைத்தொழில் (தும்பு /பிரம்பு)	02 வருடம்	■										
16. கைப்பணிக் கைத்தொழில் (தென்னை)	01 வருடம்							■				
17. கைப்பணிக் கைத்தொழில் (அழங்கார)	01 வருடம்	■			■	■			■		■	
18. பத்திக் வடிவமைப்புக் கலை	01 வருடம்			■							■	
19. பேக்கரி உற்பத்தி/உணவுத் தொழில்நுட்பம்	01 வருடம்				■	■						
20. அழங்காரக் கலை	01 வருடம்			■								
21. பாதணி மற்றும் தோள் கைத்தொழில் கலை	01 வருடம்			■								

* ராகம தொழில் பயிற்சி நிறுவனத்தின் பாடநெறிக் காலம் 06 மாதம் முதல் 01 வருடம் வரையாக மாற்றமடைய முடியும்.

1.5.2.2 ஜயவிரு செவண அரவணைப்பு இல்லம்

பெற்றோரின் அரவணைப்பை இழந்துள்ள பல்வேறு வலது குறைந்த நிலைமைகளினால் பாதிக்கப்பட்டுள்ள பல்வேறு வயது மட்டங்களையும் சேர்ந்த ஆண்களுக்கு அரவணைப்பைப் பெற்றுக் கொடுப்பதற்காக 2001 யூலை மாதம் 31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட ஜயவிரு செவண நிறுவனம் மேல் மாகாணத்தின் கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்க பிரதேச செயலாளர் பிரிவில் புவக்பிட்டிய வடக்கு அம்பலன்வத்த பிரதேசத்தில் அமைந்துள்ளது.

வாழ்நாள் முழுவதிலும் தங்கியிருக்கும் இவர்களை தனிமைப்படுத்தாது அன்புடனும், பாசத்துடனும் அரவணைப்புச் செய்யப்படுகின்றார்கள் என்பதுடன் நாளாந்த செயற்பாடுகளிலும் ஈடுபடுத்தப்படுகின்றார்கள். அரவணைப்புப் பெறும் காலப்பகுதிக்குள் வதிவிட வசதிகள் உட்பட உணவு, குடிபானம், மருத்துவ வசதிகள் போன்றன இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

1.5.2.2 மனுசத் பியச பட்டுகம்மன ரியன்சி அலகியவன்ன மகளிர் அரவணைப்பு நிலையம்

சமூக சேவைகள் திணைக்களத்தினால் 2023.02.01 ஆம் திகதி முதலாவது மகளிர் அரவணைப்பு நிலையமாக பலங்கொட பிரதேச செயலாளர் பிரிவில் மனுசத் பியச பட்டுகம்மன ரியன்சி அலகியவன்ன மகளிர் அரவணைப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. பெற்றோர் மற்றும் பாதுகாவலர்களை இழந்து நாடு முழுவதிலும் வாழ்ந்து வருகின்ற 16-59 வயதுக்கு இடைப்பட்ட வலது குறைந்த பெண்களுக்கு அரவணைப்புச் சேவைகளைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கத்துடன் இந்த நிலையம் தாபிக்கப்பட்டது. அரவணைப்புப் பெறும் காலப்பகுதியில் தங்குமிட வசதிகள் உட்பட உணவு, குடிபானம் மற்றும் மருத்துவ வசதிகளும் இலவசமாக பெற்றுக் கொடுக்கப்படுகின்றது.

1.5.2.4 ஜயவிரு சமாதி புனர்வாழ்வளிப்பு நிறுவனம்

இலங்கையின் தற்கால கடும் சமூகப் பிரச்சினையொன்றாக மாறியுள்ள விசப் போதைவஸ்துக்களுக்கு அடிமையாகியுள்ளவர்கள் கனிசமாக அதிகரித்து வருவது அவதானிக்கப்படுகின்றது. இக்குழுவினரை விளைதிறன்மிக்கவாறு சமூகத்திற்கு மற்றும் நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யும் வகையில் ஈடுபடுத்த செயற்படுவது சமூக சேவைகள் திணைக்களத்தின் மற்றொரு செயற்பணியாகும்.

அதற்கமைய, போதைக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், சமூகமயப்படுத்தல், தொழில்சார் திறமைகளை மேம்படுத்துவதற்காக சமூக சேவைகள் திணைக்களத்தில் அமுல்படுத்தப்பட்டுவந்த நவோதய கருத்திட்டத்தின் உபகருத்திட்டமாக 2007.07.31 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனம் மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தின் சீதாவக்க பிரதேச செயலாளர் பிரிவில், புவக்பிட்டிய வடக்கு அம்பலன்வத்த பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ளது.

தனியார் புனர்வாழ்வளிப்பு நிலையமாக பல வருட காலம் இயங்கி வந்துள்ள ஜயவிரு சமாதி இல்லத்தை பேணிவரும் போது வெளிப்படுத்தப்பட்ட தரமான சேவையை பாராட்டும் வகையில் போதைவஸ்துக்களுக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு நிலையங்களின் நடவடிக்கைகளை ஒழுங்குறுத்துவதற்கான 2007 இன் 54 ஆம் இலக்க ஒளடதங்களுக்கு அடிமையான ஆட்கள் (சிகிச்சை மற்றும் புனர்வாழ்வளிப்பு) பற்றிய சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் நாமோதிஸ்ட புனர்வாழ்வளிப்பு நிலையம் என்று பெயரிடுவதற்கு அபாயகரமான ஒளடதங்கள் கட்டுப்பாட்டு தேசிய சபை சிபாரிசு செய்துள்ளது.

நீதிமன்ற உத்தரவின் பேரில், தொண்டர் அடிப்படையில், பிரதேச செயலகங்கள் மற்றும் வைத்தியசாலைகளிலிருந்து அனுப்பிவைக்கப்படுகின்ற சேவை பெறுநர்களில் ஒரே தடவையில் சுமார் 70 பேருக்கு புனர்வாழ்வளிக்கக்கூடிய வசதிகளைக் கொண்டுள்ளதுடன், புனர்வாழ்வளிப்புக் காலஎல்லை 03 மாதம், 06 மாதம் மற்றும் 01 வருடம் வரையான காலப்பகுதிகளைக் கொண்டதாக இருக்கும். நீதிமன்ற உத்தரவின் பேரில் அனுப்பிவைக்கப்படுகின்ற சேவை பெறுநர்களின் புனர்வாழ்வளிப்புக் காலத்தை தீர்மானம் செய்வது நீதிமன்ற உத்தவிற்கு இணங்கவாகும்.

உண்மையான வாழ்க்கைசார் நோக்கு மற்றும் வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சியை கற்றுக் கொடுத்தல் மற்றும் ஆற்றல்களை மெருகூட்டுவதன் மூலம் போதை மீதான ஈடுபாட்டைக் குறைத்து, போதைக்கு அடிமையான இளம் சமுதாயத்தினரை தேசிய அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்துகொள்வதை செயற்பணியாகக் கொண்டு பல்வேறு போதைவஸ்துக்களுக்கும் அடிமையாகியுள்ளவர்களுக்கு வதிவிட அடிப்படையில் புனர்வாழ்வளிப்பது இந்த நிறுவனம் மூலம் மேற்கொள்ளப்படுகின்றது.

செயற்பாடுகள்

I. போதைவஸ்துக்களுக்கு அடிமையானவர்களுக்கு புனர்வாழ்வளித்தல், அவர்களின் தொழில்சார் திறமைகளை மேம்படுத்தல் மற்றும் சமூகமயப்படுத்தல்.

II. போதைவஸ்துக்களுக்கு அடிமையானதன் காரணமாக அவர்களின் குடும்பப் பின்னணியில் ஏற்பட்டுள்ள சிக்கல்களைக் குறைத்துக் கொள்ளத் தலையீடு செய்தல்.

III. போதைவஸ்துப் பயன்பாட்டின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள தொழில்வாய்ப்புக்கள் மற்றும் கல்வி நடவடிக்கைகளை சீரான நிலைமைக்குக் கொண்டுவருவதற்காக சம்பந்தப்பட்ட தரப்பினர்களுடன் தொடர்புகளை கட்டியெழுப்புதல்.

IV. அச்சுறுத்தலான நிலையிலுள்ள குழுக்களுக்கு போதைவஸ்து ஒழிப்பு பற்றி விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தல்.

1.5.2.5 சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள்

ஒரு பிள்ளையின் வளர்ச்சியில் ஏதேனும் சிக்கல் அல்லது தாமதம் ஏற்பட்டுள்ளதாக சந்தேகப்படுகின்ற சந்தர்ப்பமொன்றில் அதற்காக முன்னதாகவே தலையீடு செய்து பிள்ளையை அபிவிருத்தி செய்வதற்குத் தேவையான வழிகாட்டலைப் பெற்றுக் கொடுப்பதை நோக்காகக் கொண்டு சமூக சேவைகள் திணைக்களத்தின் கீழ் 02 நிறுவனங்களின் ஊடாக சிறுவர் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

சரியான வழிகாட்டலைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்புடன் நிறுவனத்திற்கு வருகைதருகின்ற பெற்றோருக்கு பிரதானமாக மேற்கொள்ளப்படுவது பிள்ளைகளின் வாழ்க்கைத் தகவல்களைப் பெற்றுக் கொண்டு பிள்ளையைப் பதிவு செய்து, பிள்ளைகளின் தேவைகளை இனங்கண்டு வளர்ச்சி நிலைமையின் சரியான மதிப்பீட்டை உறுதி செய்துகொள்வதாகும். இதனை அடுத்து பிள்ளையின் அபிவிருத்திக்குத் தேவையான சேவைகள் தொடர்பில் நேரடியான மற்றும் மறைமுகமான தலையீடும் மேற்கொள்ளப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் உளவியல் நிலைமையை மென்மேலும் நல்ல நிலைக்குக் கொண்டு வருவதற்கான ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதும் மேற்கொள்ளப்படுகின்றது. அவ்வாறே சேவை ஆற்றப்படுகின்ற சிறுவர்கள் நல்ல முறையில் அபிவிருத்தியடைந்த பின்னர் விசேட பாடசாலைகளுக்கு, விசேட கல்வி அலகுகளுக்கு மற்றும் சாதாரண பாடசாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றார்கள்.

- **நாவின்ன சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

2003 ஆம் ஆண்டு மேல் மாகாணத்தின், கொழும்பு மாவட்டத்தில், மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில், நாவின்ன. பதிரகொட பிரதேசத்தில் தாபிக்கப்பட்ட இந்த நிறுவனத்தின் மூலம் 06 மாதம் முதல் 16 வயது வரையான பிள்ளைகள் சுமார் 100 பேருக்கு வருடாந்தம் சேவைகள் ஆற்றப்பட்டு வருகின்றன.

- **சித்திஜய சிறுவர் வழிகாட்டல் நிலையம்**

2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 25 ஆம் திகதி ஹம்பாந்தோட்டை மாவட்டத்தின் அம்பலாந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவில், ஒலுவில வீதி, மல்பெத்தாவ பிரதேசத்தில் தாபிக்கப்பட்டுள்ள இந்த நிறுவனத்தின் மூலம் கடந்த ஆண்டில் 06 மாதம் முதல் 16 வயது வரையான பிள்ளைகள் 42 பேருக்கு வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன.

1.5.2.6 கொட்டாவ முன் தொழில் திறன் அபிவிருத்தி நிலையம்

வயது 14-30 இற்கு இடைப்பட்ட வலகு குறைந்த இளைஞர், யுவதிகளை எதிர்காலத்தில் தொழில் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்குத் தேவையான முன் ஆயத்தப்படுத்துவதை நோக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட கொட்டாவ திறன் அபிவிருத்தி நிலையமானது, கொழும்பு மாவட்டத்தின் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ளது. தொழில் பயிற்சியில் ஈடுபடுகின்ற போதிலும் தகைமை பெறாத வலது குறைந்த இளைஞர் யுவதிகள் மற்றும் சிறுவர் வழிகாட்டல் நிலையங்களிலிருந்து ஆரம்பப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டுள்ள வலது குறைந்த சிறுவர்களின் தொழில் பயிற்சிக்குத் தேவையான திறமைகளை அபிவிருத்தி செய்வது இந்த நிறுவனத்தின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது. வருடாந்தம் வலது குறைந்த பிள்ளைகள் சுமார் 50 பேருக்கு திறன்களை அபிவிருத்தி செய்வதும், அதன் மூலம் அவர்களை தொழில் பயிற்சியில் ஈடுபடுத்துவதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

1.6 திணைக்களத்தின் கீழ் காணப்படுகின்ற நிதியம்

1.6.1 கற்புலனற்றோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்

இலங்கையில் வலது குறைந்த ஆட்கள் பற்றிய புதிய மனப்பாங்கை வளர்ப்பும் முறைகள் ஆரம்பிக்கப்பட்டது 1981 ஆம் ஆண்டு சர்வதேச வலது குறைந்தோருக்கான ஆண்டாக பிரகடனம் செய்யப்பட்டதை அடுத்தாகும். இதற்குச் சமாந்தரமாக வலது குறைந்த சமுதாயத்தினரின் உரிமைகளைப் பாதுகாத்தல் மற்றும் அவர்களை வலுவூட்டுவதற்காக அரச அனுசரணையுடன் தேசிய மட்டத்தில் கொள்கைசார் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. அதன் கீழ் கற்புலனற்ற நிலைமைக்கு ஆளாகும் ஆட்களுக்குத் தேவையான சேவைகளை வழங்குதல், புனர்வாழ்வளித்தல் மற்றும் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதை செயற்பணியாகக் கொண்டு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் 1992 இன் 09 ஆம் இலக்க கற்புலனற்றோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கை நிதியம் என்ற பெயரில் ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டு அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தல் மூலம் பிரகடனம் செய்யப்பட்டது.

இந்த சட்டத்திற்கு அமைய இலங்கையில் வாழும் கற்புலனற்ற ஆட்களுக்கான பல்வேறு சேவைகளையும் அமுல்படுத்தி சமூக சேவைகள் விடயப்பொறுப்பு அமைச்சின் செயலாளரின் தலைமையின் கீழ் இயங்கும் ஒரு குழுவின் ஊடாக நிருவிக்கப்படுகின்ற இந்த நிதியம் சமூக சேவைகள் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தின் கீழ் பேணிவரப்படுகின்றது.

செயற்பாடுகள்

i. கற்புலனற்ற ஆட்கள் மற்றும் கற்புலனற்ற அமைப்புக்களுக்கு விளையாட்டு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்

ii. தொழில் பயிற்சி நடவடிக்கைகள்

iii. கல்வி மற்றும் கலாசார உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- கற்புலனற்ற மாணவர்கள் மற்றும் கற்புலனற்ற பெற்றோரின் கற்புலனற்றவர்கள் அல்லாத பாடசாலை மாணவர்களுக்கு மாணவர் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்
- கற்புலனற்ற பல்கலைக் கழக மாணவர்களுக்கு மாணவர் உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்
- கற்புலனற்ற வாசகர்களுக்கு பிரேல் முறையில் வெளியிடப்படும் 'காலய' எனும் சஞ்சிகைக்கு உதவி வழங்குதல்.

iv. புனர்வாழ்வளிப்பு உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

- பிற்காலத்தில் கற்புலனற்ற நிலைமைக்கு ஆளாகும் ஆட்களை உளவியல் ரீதியாக பலப்படுத்தல் மற்றும் சமூகமயப்படுத்தும் நிகழ்ச்சித்திட்டம்
- பேச்சு நூலக நிகழ்ச்சித்திட்டம் - கற்புலனற்ற ஆட்கள் நூல்களைப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கு சாதாரண அச்சு எழுத்து மூலமான நூல்களை பேச்சு நூல்களாக மாற்றியமைத்தல்.
- கற்புலனற்ற ஆட்களின் வீடுகளுக்கு மின்சாரம் மற்றும் குடிநீர் பெற்றுக் கொள்ள உதவி வழங்குதல்.
- சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு கற்புலனற்ற ஆட்கள் அல்லது கற்புலனற்ற ஆட்களின் அமைப்புக்கள் சமர்ப்பிக்கின்ற கோரிக்கைகளுக்கு அமைய உதவிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

v. கண் வில்லை மற்றும் கண் சிகிச்சைகளுக்கு உதவி வழங்குதல்.

vi. சர்வதேச வெண்பிரம்பு தின தேசிய நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்தல்.

1.7 வெளிநாட்டு தொழில்நுட்ப உதவி பெறும் கருத்திட்டங்கள்

- கருத்திட்டத்தின் பெயர் : Project for Promoting Employment Support of Persons with Disabilities in Sri Lanka (ESPD)

- பங்களிப்பு செய்யும் முகவர் நிறுவனம் : யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு மன்றம்(JICA) தொழில்நுட்ப அறிவை மாத்திரம் வழங்குதல்.

- கருத்திட்டக் காலம் :- 4 வருடம் (2021 நவம்பர் - 2025 நவம்பா)

1.8 அரசசார்பற்ற நிறுவனங்களின் அனுசரணையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள்

தொடர் இல.	நிறுவனம்	நிகழ்ச்சித்திட்டம் /செயற்பாடு	அனுசரணை
01	ChildFund நிறுவனம்	தொழில் பயிற்சி நிறுவனங்களில் பயிலுனர் அபிவிருத்திக்கான வழிகாட்டல் தொகுப்பு	அச்சிடுவதற்கு அனுசரணை வழங்குதல்
		திறன் அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் - நில்லம்ப சமுர்த்தி பயிற்சி நிலையம்	அலுவலர்கள் 60 பேருக்கு உணவு, குடிபானம், தங்குமிடல் மற்றும் வளவாளர் கொடுப்பனவு பெற்றுக் கொடுத்தல்
		பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வு (TOT) - அமுனுகும்புர தொழில் பயிற்சி நிலையம்	அலுவலர்கள் 35 பேருக்கு உணவு, குடிபானம் மற்றும் வளவாளர் கொடுப்பனவு பெற்றுக் கொடுத்தல்
		சமூக உணர்வுசார் கற்றல் விழிப்புணர்வூட்டல் செயலமர்வு (Social Emotional Learning) - இலங்கை மன்றக் கல்லூரி	அலுவலர்கள் 40 பேருக்கு உணவு, குடிபானம், தங்குமிடல் மற்றும் வளவாளர் கொடுப்பனவு பெற்றுக் கொடுத்தல்
		கிளிநொச்சி மற்றும் தெலம்புயாய தொழில் பயிற்சி நிறுவனங்களில் தொண்டர் அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட போதனாசிரியர்களுக்கு கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொடுத்தல்	தொழில் பயிற்சி போதனாசிரியர்கள் 5 பேருக்கு ரூபா 40,000.00 வீதம் கொடுப்பனவு செலுத்தல்
02	UN Women	மனுசத் பியச ரியன்சி அலகியவன்ன வலது குறைந்த பெண்கள் அரவணைப்பு நிலையத்திற்குத் தேவையான உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொடுத்தல்	தேவையான உணவுப் பொருட்களை 02 மாதங்கள் பெற்றுக் கொடுத்தல்

அத்தியாயம் 02

முன்னேற்றம் மற்றும் எதிர்கால நோக்கு

சமூக சேவைகள் திணைக்களத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் முன்னேற்றம்

2.1. வலது குறைந்தவர்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்

சமூக சேவைகள் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற பிரதான நிகழ்ச்சித்திட்டமாக இருப்பது வலது குறைந்த ஆட்களுக்கான நலன்புரி மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமாகும். திணைக்களத்தின் செயற்பணிக்கு இணங்க இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் உத்தேச நோக்கங்களை அடைந்துகொள்வதற்காக பிரதேச மட்டத்திலிருந்து தேசிய மட்டம் வரை அமுல்படுத்தப்பட்டுள்ள கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உப கருத்திட்டங்கள் சில காணப்படுவதுடன், அவை பின்வருமாறாகும்.


- ❖ வலது குறைந்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சி அளிப்பதன் மூலம் புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தல்.
- ❖ முன்பிள்ளைப் பருவத்திலேயே ஏற்படுகின்ற வலது குறைந்த நிலைமைகளை இனங்காணத் தேவையான தலையீடுகள் மற்றும் அபிவிருத்தி செய்தல்.
- ❖ வலது குறைந்த இளைஞர், யுவதிகளின் முன் தொழில் திறமைகளை அபிவிருத்தி செய்தல்.
- ❖ பெற்றோர், பாதுகாவலர்களை இழந்துள்ள புத்திக் குறைபாட்டைக் கொண்ட ஆண்களுக்கு அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
- ❖ பெற்றோர், பாதுகாவலர்களை இழந்துள்ள பெண்களுக்கு அரவணைப்பைப் பெற்றுக் கொடுத்தல்.
- ❖ சமிஞ்சை மொழி மேம்பாடு.
- ❖ வலது குறைந்த ஆட்களுக்கான தொண்டர் அமைப்புக்கள் 26 இற்கு பயிலுனர் கொடுப்பனவு, பங்கேற்றல் கொடுப்பனவு, ஆசிரியர் கொடுப்பனவு, உபசரணை கொடுப்பனவு, போக்குவரத்துக் கொடுப்பனவு, தங்குமிட கொடுப்பனவு மற்றும் பராமரிப்புக் கொடுப்பனவுகளை பெற்றுக் கொடுத்தல்.
- ❖ வலது குறைந்த ஆட்களுக்கான சமூதாய அடிப்படையிலான புனர்வாழ்வளிப்பு தேசிய நிகழ்ச்சித்திட்டம்
- ❖ கற்புலனற்றோர் புனர்வாழ்வளிப்பு நம்பிக்கை நிதியம் ஊடாக கற்புலனற்ற சமுதாயத்தினருக்கு புனர்வாழ்வளித்தல்.
- ❖ வலது குறைந்த பிள்ளைகளின் விளையாட்டு மற்றும் கலைத் திறமைகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டம்

2.1.1 வலது குறைந்த இளைஞர், யுவதிகளுக்கு தொழில் பயிற்சி அளிப்பதன் மூலம் புனர்வாழ்வளித்தல் மற்றும் சமூகமயப்படுத்தல்

சமூக சேவைகள திணைக்களத்தினால் அமுல்படுத்தப்படுகின்ற முன்னோடிக் கருத்திட்டமொன்றாக இருப்பது வலது குறைந்த இளைஞர் யுவதிகளுக்கு தொழில் பயிற்சியளிப்பதாகும். நாடு முழுவதிலும் பரந்துள்ள தொழில் பயிற்சி நிறுவனங்கள் 11 இன் ஊடாக வருடாந்தம் வலது குறைந்த இளைஞர் யுவதிகள் சுமார் 500 பேருக்கு தொழில் பயிற்சி வழங்கப்பட்டு வருகின்றது.

2023 கல்வி ஆண்டுக்கு புதிய பயிலுனர்களை ஆட்சேர்ப்புச் செய்துகொள்ளல் மற்றும் பாடநெறியை ஆரம்பித்து வைப்பது 2023 சனவரி மாதம் 09 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்டதுடன், மேற்படி கல்வி ஆண்டுக்கான ஒரு வருட பாடநெறி 2023 டிசம்பர் மாதம் 22 ஆம் திகதி நிறைவு செய்யப்பட்டது.

2023 இல் தொழில் பயிற்சி நிறுவனங்களின் பயிலுனர்களின் எண்ணிக்கை



2023 ஆம் ஆண்டுக்கு பயிலுனர்கள் 464 பேர் இணைத்துக் கொள்ளப்பட்டார்கள் என்பதுடன், மேற்படி பயிலுனர்களில் ஒரு வருட தொழில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்த பயிலுனர்களின் எண்ணிக்கை 307 பேர் ஆகும்.

2.1.2 சிறுவர் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டம்

சிறுவர் வழிகாட்டல் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திணைக்களத்தினால் அமுல்படுத்தப்பட்டுள்ள சிறுவர் வழிகாட்டல் நிலையங்கள் 02 காணப்படுகின்றன.

